செய்தி வெளியீடு எண்–550 நாள்–9.7.2008

# செய்தி வெளியீடு

## நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் நீடித்த கட்டமைப்பு வசதிகளுக்காக ஜெர்மன் நாட்டு வங்கியின் நிதியுதவி பெற மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் ஒப்பந்தம் கையெழுத்தானது.

தமிழக அரசு, தமிழ் நாடு நகர்ப்புற மேம்பாட்டு நிதியம் மூலமாக உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேவையான கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த நீண்டகால அடிப்படையில் கடன் வசதி அளித்து வருகிறது. உலக வங்கி, ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு வங்கி போன்ற பல்வேறு அரசு நிதி நிறுவனங்களிடமிருந்து நிதியுதவி பெறப்படுகிறது.

உலக வங்கி நிதியுதவியுடன் மூன்றாவது தமிழ் நாடு நகர்ப்புற வளர்ச்சி திட்டம் சுமார் **ரூ.1884** கோடி (434 மில்லியன்அமெரிக்க டாலர்) திட்ட மதிப்பில் செயல்படுத்தப்பட்டுவருகிறது. இத்திட்டத்தின்கீழ் 35 நகரங்களில் பாதாள சாக்கடைத் திட்டங்கள், திருநெல்வேலி குடிநீர் திட்டம், குறிச்சி –குனியமுத்தூர் கூட்டுக் குடிநீர் திட்டம், வடவள்ளி–கவுண்டம்பாளையம் கூட்டு குடிநீர் திட்டம் மற்றும் சாலைகள், பேருந்து நிலையங்கள், திடக்கழிவு மேலாண்மைத் திட்டங்கள்போன்ற நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டங்கள் தமிழகமெங்கும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு வங்கியிடமிருந்து சுமார் ரூபாய் 340 கோடி (8551 மில்லியன் ஜப்பானிய யென்) கடன் பெறுவதற்கான ஒப்பந்தம் மார்ச்சு 10, 2008 அன்று கையொப்பமிடப்பட்டது. திருச்சி குடிநீர் திட்டம் மற்றும் ஆறு நகரங்களில் பாதாள சாக்கடைத் திட்டங்கள் இந்த நிதியுதவியுடன் செயல்படுத்தப்படவுள்ளது.

உலக வங்கி மற்றும் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு வங்கி தவிர தற்போது KfW எனப்படும் ஜெர்மானிய நாட்டு நிதி நிறுவனத்திடமிருந்தும் கடனுதவி பெற முடிவு செய்யப்பட்டு உள்ளது.

அதன் தொடர்ச்சியாக இன்று இந்நிறுவனத்திடமிருந்து சுமார் ரூபாய் 534 கோடி (77 மில்லியன் யூரோ) நிதியுதவி பெறுவதற்கான ஒப்பந்தம் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் கையொப்பமிடப்பட்டுள்ளது. இந்த நிதியுதவி மூன்று பகுதிகளாக வழங்கப்படவுள்ளது.

முதல் பகுதியாக, நகர்ப்புற கட்டமைப்பு திட்டங்களை நிறைவேற்றுவதற்காக உள்ளாட்சி அமைப்புகளுக்கு கடன் உதவியாக வழங்குவதற்கு ரூபாய். 450 கோடி (65 மில்லியன் யூரோ) ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிதியைக் கொண்டு குடிநீர் மேம்பாடு, பாதாளச் சாக்கடைத்திட்டம்,

சாலை வசதி போன்ற திட்டங்களை நிறைவேற்ற முடியும். இதில் கடனுதவியாக ரூ.300 கோடியும், மானியமாக ரூ.150 கோடியும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படும். இதன் வட்டி விகிதம் LIBOR விகிதத்திலிருந்து 0.40% குறைவாக இருக்கும். இதன் திரும்பச் செலுத்தும் காலம், மூன்று ஆண்டுகள் சலுகை உட்பட மொத்தம் 12 ஆண்டுகள். இந்த திட்டத்தினை நிறைவேற்றும் காலம் 2008–09 முதல் சுமார் 5 ஆண்டுகள் ஆகும்.

இரண்டாம் பகுதியாக, சிறிய மற்றும் நடுத்தர நகரங்கள் கடன் பத்திரங்கள் மூலமாக நிதி திரட்டுவதற்கு ஏதுவாக சுமார் ரூபாய் 70 கோடி (10 மில்லியன் யூரோ) அளவிற்கு ஒரு பொது நிதி ஆதார அமைப்புக்கு கடனாக வழங்கப்படுகிறது. இந்த ஒருங்கிணைந்த நிதி ஆதார அமைப்பின் (Master Financing Indenture) மூலமாக உள்ளாட்சி அமைப்புகள் மூலதன சந்தையிலிருந்து கடன் பத்திர வெளியீட்டின் மூலமாக சுமார் ரூபாய் 110 கோடி வரை நிதி திரட்ட முடியும். இந்த நிதியைக் கொண்டு சுமார் ரூபாய் 200 கோடி மதிப்பீட்டிலான திட்டங்களை நிறைவேற்ற முடியும். மீதமுள்ள ரூபாய் 20 கோடி உள்ளாட்சி அமைப்புகள் முதலீடு செய்ய வேண்டும். இதனுடைய வட்டி விகிதம் சுமார் 0.75% ஆகும். இதன் திரும்பச் செலுத்தும் காலம், 10 ஆண்டுகள் சலுகைக் காலம் உட்பட மொத்தம் 40 ஆண்டுகள் ஆகும்.

மூன்றாம் பகுதியாக, சுமார் ரூபாய் 14 கோடி (2 மில்லியன் யூரோ) தொழில்நுட்ப திறனைப் பெருக்கிக் கொள்வதற்காக மானியமாக வழங்கப் படுகிறது.

இந்த நிதியுதவிக்கான ஒப்பந்தங்கள் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் இந்திய அரசின் நிதித்துறை இணைச் செயலாளர் திரு. குமார் சஞ்சய் கிருஷ்ணா, KfW–வின் டில்லி தலைமை அலுவலக இயக்குநர் திரு.கிருஸ்டியன் காஸ், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலர் திரு. க. தீனபந்து, இ.ஆ.ப., TNUIFSL மேலாண் இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர், திரு. விக்ரம் கபூர், இ.ஆ.ப. ஆகியோர்களுக்கிடையே இன்று கையொப்பமானது.

இந்நிகழ்ச்சியின்போது தமிழ்நாடு அரசு நிதித்துறை முதன்மைச் செயலர் திரு. கே.ஞானதேசிகன், இஆப நகராட்சி நிர்வாகத்துறை ஆணையர் டாக்டர் நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப., பேரூராட்சிகளின் ஆணையர் டாக்டர் கே. கோபால், இ.ஆ.ப., மற்றும் சென்னை மாநகராட்சி ஆணையர், திரு. ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.

வெளியீடு– இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–600 009.